வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கடைசியாக முடிக்கும்போது புதிய பேருந்து நிலையம் வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். அந்தப் பேருந்து நிலையத்தைப் பழுதுபார்க்க வேண்டுமா அல்லது புதிய பேருந்து நிலையமாக முழுமையாக மாற்ற வேண்டுமா என்பதை துறை அதிகாரிகள் ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, பரிசீலனை செய்யப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. L. இதயவர்மன், மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

13—

குளிர்பதனக் கிடங்கு

***51566—திரு. L. இதயவர்மன்:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதி, நெம்மேலி மற்றும் சதுரங்கப்பட்டினம் கடற்கரைப் பகுதிகளில் மீன்களைப் பதப்படுத்துவதற்கு குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் தொகுதியிலுள்ள சதுரங்கப்பட்டினம் மீனவ கிராமத்தில் 180 FRP *படகுகளும், நெமிலி கிராமத்தில் 41* FRP *படகுகளும் இயங்குகின்றன. இதன் மூலமாக நாளொன்றுக்கு 3 முதல் 4 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு வருகின்றன. பிடிக்கப்படும் மீன்களைப் பதப்படுத்துவதற்கு ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் 10 டன் கொள்ளளவுக் கொண்ட குளிர்பதனக்*

2021 பிப்ரவரி 5]

கிடங்கு அமைத்திட, சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. L. இதயவர்மன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ராதாபுரம் தொகுதியில் இருக்கின்ற திசையன்விளையில் பருவ மழை பொய்த்து, அங்கேயிருக்கிற குளங்கள் எல்லாம் வறண்டு கிடக்கின்ற நிலையில், கடந்த டிசம்பர் மாதம் 23 ஆம் தேதி திருநெல்வேலிக்கு வந்திருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை விவசாயப் பெருமக்களோடு சென்று சந்தித்தோம். எங்கள் பகுதியில் இருக்கின்ற குளங்கள் நிரம்பாத காரணத்தினால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடும் என்ற நிலையை எடுத்துச் சொன்னதன்பேரில், 30 ஆண்டுகளுக்குப் பிறகு சிறப்பான ஓர் அரசாணையை வெளியிட்டு, தற்போது மணிமுத்தாறு நீரை திசையன்விளை பகுதிக்குத் தந்திருக்கிறார்கள். குளங்கள் எல்லாம் நிரம்பி வழிகின்றன. எனவே, மக்கள் மனங்களும் நிரம்பி வழிகின்றன. 'நீரின்றி அமையாது உலகு' என்பார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே, 'இனி நீர் இல்லாமல் தமிழகமும் அமையாது' (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைச் சொல்லி, அவருக்குத் துணையாக, பக்கபலமாக படை நடத்தி, இயக்கத்தை வழிநடத்திச் சென்று கொண்டிருக்கிற துணை முதல்வர் அவர்களையும் வாழ்த்துகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ராதாபுரம் தொகுதியில் இருக்கிற கூட்டப்புளி, கூடுதாழை மற்றும் பெருமணல் ஆகியவை கடற்கரை கிராமங்கள் ஆகும். இங்கே மீனவர்கள் 'ஒரு நாள் போவார், ஒரு நாள் வருவார், ஒவ்வொரு நாளும் துயரம்' என்று புரட்சித் தலைவர் பாடியதற்கிணங்க, அவர்கள் தண்ணீரில் அல்ல, கண்ணீரில் தொழில் நடத்தி வருகிறார்கள். எனவே, அங்கு ஒரு தூண்டில் வளைவு வேண்டுமென்று நெடுங்காலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு மறைந்த முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்கூட கடந்த 2010 ஆம் ஆண்டு திருநெல்வேலிக்கு வந்தபோது, 'இங்கு தூண்டில் வளைவு அமைத்துத் தரப்படும்' என்ற உறுதிமொழியைத் தந்திருக்கிறார்கள். எனவே, கேட்டதையெல்லாம் தருகின்ற இந்த நல்லரசை, அம்மாவினுடைய அரசை நான் இந்த அவை மூலமாக

விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம், கூட்டப்புளி, கூடுதாழை மற்றும் பெருமணல் ஆகிய இடங்களில் தூண்டில் வளைவு அமைத்துத் தருமா? அதை அமைத்துத் தர வேண்டுமென்ற ஓர் உந்துதலோடு, உணர்வோடு, ஊக்கத்தோடு என்னுடைய வசந்த வார்த்தைகளால் அங்கே தூண்டில் வளைவு அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக இந்த அரசிடம் அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற ராதாபுரம் தொகுதியில் அருவிக்கரை என்ற மீனவ கிராமத்தில் குறைந்த எண்ணிக்கையில் மீன்பிடி தொழில் செய்வதற்கு வசதியாக தங்குதளம் அமைக்க வேண்டுமென்ற கருத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக்கு முன்வைத்து, அதனடிப்படையில், அரசும் அந்தக் கருத்தினை ஏற்றுக்கொண்டது. அதற்கு அடிப்படையாக, பெங்களூருவில் உள்ள Central Institute of Coastal Engineering for Fishery (CICEF) நிறுவனம் மற்றும் National Fisheries Development Board ஆகியவற்றின் கருத்துகளையெல்லாம் பெற்று, தற்போது அருவிக்கரை பகுதியில் தங்குதளம் அமைக்க சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில், விரைவில் அரசாணை வெளியிடப்படவிருக்கின்றது. கேட்டதையெல்லாம் கொடுக்கின்ற அரசு அம்மாவினுடைய அரசு. 'கேளுங்கள் தரப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும்' என்ற ஒரே இலக்கைக் கொண்டது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும், எனவே, அந்த அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனது தொகுதியான ராதாபுரம் தொகுதியை உள்ளடக்கிய கடற்கரைப் பகுதியில் பல்வேறு கிராமங்களில் தூண்டில் வளைவு அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இதுகுறித்து ஆய்ந்து அறிந்து கருத்துகள் பெறப்படும். இவற்றில் technical issue இருக்கின்ற காரணத்தினால் வல்லுநர் குழுவினுடைய

2021 பிப்ரவரி 5]

அறிக்கைகளையெல்லாம் பெற்று, அதனடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்து, அதன் பிறகுதான் நாம் அதை நிறைவேற்ற முடியும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு நிச்சயமாக ஏற்று, ஆய்வு செய்து, பரிசீலித்து, அதனடிப்படையில் நிறைவேற்றும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

14—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***76662—திரு. ஆர். கணேஷ்:**

மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *உதகமண்டலம் தொகுதி, குந்தா வட்டம், மஞ்சூரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *உதகமண்டலம் தொகுதி, குந்தா வட்டம், மஞ்சூரில் புதிய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.